www.tamilarangam.net

# யுத்தம்: செய்ய வேண்டியது என்ன?

"ஓர் இனம் சமூகநலத்துறையைக் காட்டிலும், யுத்தத்திற்குச் செலவு செய்தால், அவ்வினம் ஆன்மீகரீதியில் மரணத்தையே அண்மித்துக் கொண்டிருக்கிறது."
-மார்ட்டின் லூதர் கிங்-

**நம்புங்கள்!**

இது மிகத் துன்பகரமானது. அதிகரித்து வரும் பிணக்குவியல்களின் அதிகரிப்பையே தினசரி எங்கும் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. இலங்கை வானொலியில் சிங்கள எழுச்சிக் கீதங்கள் கேட்கும் அதேவேளை வடக்கிலும் தெற்கிலும் வெள்ளைக் கொடிகள் ஏற்றப்படுகின்றன. அனைவரும் சந்தேகத்துடனேயே வாழ்கின்றனர். இனங்களுக்கிடையில் சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டிய போதிலும் போலி "தேசியப் பத்திரிகைகள்" இனவாதத்தையே பரப்புகின்றன. தமது பிள்ளைகளை இழக்க நேரும் என்ற சந்தேகத்திலேயே வடக்கிலும் தெற்கிலும் பெற்றோர் வாழ்க்கையை நடத்துகின்றனர். தமது உயிரைப் பற்றிய பீதியுடனேயே அவர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.
எனவே, ஒரு காலத்தில் தர்மதீபமாகக் கருதப்பட்ட இலங்கை இன்று அதர்மதீபமாக மாறியுள்ளது.

## இந்த நிலைமை ஏன்?

எமது வளங்கள் ஒரு சிறுபிரிவினரின் கைகளிற் சென்று குவிந்தமையே இப்பிரச்சினையின் அடிப்படையாகும். அதே சமயம் தெளிவான இரு பிரிவுகளாக சமுதாயம் குறுகிவருவதையும் தடுக்க முடியாதுள்ளது. இவ்வளங்களை ஒன்று குவித்த சிறுபான்மையினர், தமது நிலையை உறுதிப்படுத்துவதற்கும் தமக்கு எதிராக உருவாகும் போராட்டங்களைத் தடுப்பதற்கும் இனங்களுக்கிடையில் பூசல்களை வளர்த்தனர். வளங்களுக்கு உரிமை கோர முடியாத பெரும்பான்மையினரின் போராட்டம் வழிதவறப்பட்டு இனவாத இலக்குகளை நோக்கிச் செல்வது துரதிர்ஷ்டமாகும்.

1948ஆம் ஆண்டு சுதந்திரத்தின் ஊடாக வேரூன்றிய தேசிய அரசு என்னும் கருத்தியல் மூலம் சிங்கள மக்களின் அரசே உருவாக்கப்பட்டது. இவ்வரசு சிறுபான்மை இனங்களை ஒடுக்கியே வளர்ச்சி அடைந்தது. 1956இன் பின்னர் சிங்களமொழி ஆட்சிபீடம் ஏறியது. தமிழ்மொழியுடன் வாழ்ந்தோர் தொழிலுக்குச் செல்லும் போதும், அரசுடன் கடிதத் தொடர்பு கொள்ளும் போதும், நீதிமன்றங்களுக்குச் செல்லும் போதும் மொழிரீதியாகப் பல்வேறு இடர்களை எதிர்நோக்கினர். இவை காரணமாக தமிழர்களின் அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டன. ஒரு காலத்தில் தமிழ்மக்களின் சார்பில் செயற்பட்ட 'இடதுசாரிகள்'கூட 1972 அரசியல்யாப்பை அறிமுகப்படுத்தித் தமிழ் மக்களுக்கு சோல்பரி அரசியல் யாப்பின் 29(ii) வாசகம் மூலமாகக் கிடைத்திருந்த பாதுகாப்பையும் இல்லாதொழித்தனர்.

www.tamilarangam.net

இதனால் இடதுசாரிகள் தமிழ்மக்கள் வைத்த நம்பிக்கைக்குத் துரோகம் விளைவித்தனர். இந்நிலையில் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு எவரும் முன்வரவில்லை. இச்சூழ்நிலையிலேயே தனிமைப்பட்ட தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். இவர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பாரிய சிவில் யுத்தமாக இன்று பரிணமித்துள்ளது.

இன்று இந்த அழிவு நடவடிக்கைகளின் விளைவாக எமது சமூகத்தின் முக்கிய அடிப்படைக் கருத்திட்டமாக யுத்தம் மாறியுள்ளது. கலாசார விழுமியங்கள் சீரழிகின்றன. பௌதீக ஆன்மீக வீழ்ச்சியின் ஊடாக போஷாக்கின்மை-பட்டினி-உயரும் வாழ்க்கைச்செலவு என்பவை மூலம் வறுமை கோரத்தாண்டவமாடுகின்றது. ஆனால், இந்தப்பாபகரமான ஆட்சியாளர்களுக்கு இவை ஆசீர்வாதமாகவே அமைந்துள்ளன.

யூ.என்.பி அரசாங்கத்தின் போலி அபிவிருத்தியின் நிர்வாண கோலமாகிய வேலையின்மையை மூடிமறைப்பதற்கு யுத்தம் பயன்படுத்தப்படுகின்றது. வேலையின்மை காரணமாக அவதியுறும் சிங்கள இளைஞர்களுக்கு இராணுவம் பொலிஸ் ஆகிய ஆயுதப்படைகளின் வெற்றிடங்கள் கூட்டப்பட்டு இளைஞர்கள் ஏமாற்றப்படுகின்றனர். எனவே வேலையற்ற சிங்கள இளைஞர்கள் பொருளாதார நிர்ப்பந்தங்கள் காரணமாக ஆயுதப்படைகளில் சேர்கின்றனர். இவ்வாறு சேர்வதன் இறுதி விளைவு மரணம். உண்மையில் இது அரசாங்கத்தின் மரணப்பொறியாகும்.

இப்பின்னணியின் கீழ் கல்விக்கும் ஏனைய சமூகநலத்துறைகளுக்கும் உள்ள முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. போர் வெறியர்கள் யுத்த எழுச்சிக் கீதங்கள் பாடும் வேளையில் ஏழைகளின் வீடுகளில் மரணத்தின் அடையாளச் சின்னங்களாக வெள்ளைக் கொடிகள் ஏற்றப்படுகின்றன.

கல்விவெட்டிற்கு எதிராக தென்னிலங்கையில் உருவாகும் ஆர்ப்பாட்டங்களை அடக்கி ஒடுக்கி நசுக்குவதற்கும் எண்ணிக்கையில் அதிகரிக்கப்பட்ட ஆயுதப்படைகளே பயன்படுத்தப்படுகின்றன. அரசாங்கம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை பறிக்கின்றது. அண்மைக்கால பயங்கரவாத நடவடிக்கைகளும்- அவற்றை அடக்கி ஒடுக்கியமையும் இதற்கு நல்ல உதாரணங்களாகும். கல்வியை விட வடக்கில் கொலைகளைச் செய்வதற்கு அதிக நிதியை வழங்கும் அரசாங்கம் இக்கருத்தியலையே மக்கள் மத்தியிலும் திணிக்கின்றது.

## ஆட்சியாளர்கள் இவ்வாறு செயற்படும் போது விடுதலைப் புலிகள் என்ன செய்கின்றனர்?

தென்னிலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை கொடூரமாக அடக்கியொடுக்கும் வேளையில், தமிழ் மக்கள் வாழ்வை அல்லது மரணத்தைத் தேர்ந்தெடுக்காது மரணத்தை மாத்திரமே தேர்ந்தெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். மக்கள் தம்மையே மாய்த்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளுவதன் மூலமே விடுதலைப்புலிகளின் வாழ்வும் அதிகாரமும் தங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் சிங்கள-தமிழ்-முஸ்லீம் மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், ஒப்பீட்டுரீதியில் தமிழ் மக்களே இந்நடவடிக்கைகள் காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இனப்பிரச்சினை இன்று மிக ஆழமாக வேரூன்றி உள்ளது. தேசிய மட்டத்தில் ஒரு பிரிவினர் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்க்கின்றனர். ஒற்றை ஆட்சி என்ற கருத்தியலை தோள்களிற் சுமந்துள்ள ஒருசில இனவாதிகள் யுத்தம் என்ற மாயையில் சிக்குண்டுள்ளனர். ஆனால், போரில் வெற்றிவாகை சூடலாம் என்று மனப்பால் குடித்த அனைவருடைய எதிர்பார்ப்புக்கள் சின்னாபின்னமாகி உள்ளன. ஏனெனில், விடுதலைப்புலிகளின் சக்தியை தகர்த்தெறிவதற்கென யுத்தத்தை தீவிரப்படுத்த மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளின் போதும் அதற்குச் சமாந்தரமாக விடுதலைப்புலிகளின் சக்தி வலுப்பெற்றுள்ளது. விடுதலைப்புலிகள் வளர்ச்சி அடைவதற்குப் போர் தொடரவேண்டும். போர்நிறுத்தம் ஏற்பட்டால் விடுதலைப்புலிகள் வெற்றிக்குப் பதிலாகத் தோல்வியையே தழுவிக் கொள்வார்கள். தமிழ்மக்களை விடுதலைப்புலிகளிடம் இருந்து மீட்பதன் மூலமே விடுதலைப்புலிகளை தோற்கடிக்க முடியும். இதற்கு தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் அத்தியாவசியமான நிபந்தனைகளில் ஒன்றாகும். யுத்தம் தொடர்ந்தால் தமிழ்மக்கள் விரும்பாவிட்டாலும் விடுதலைப்புலிகளையே அவர்கள் நாடநேரும்.

அதேசமயம் தென்னிலங்கையில் தொழிலாளர்களையும்- வெகுஜனங்களையும்- இளைஞர்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு அரசாங்கம் யுத்தத்தைச் சாட்டாக வைத்தே செயற்படுகின்றது.

வடக்கில் இடம்பெறும் யுத்தம் காரணமாக இன்று முஸ்லீம் மக்களும் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். பெருந்தேசியவாதக் கருத்தியல் காரணமாக ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்ட முஸ்லீம் மக்கள் இன்று விடுதலைப்புலிகளின் படுகொலை அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகியுள்ளனர். முஸ்லீம் மக்களின் பிரச்சினைகள் நீறுபூத்த நெருப்பு போல அமைந்துள்ளன. இனப்பிரச்சினை பல்வேறு கூறுகளாக வளர்ச்சி அடையும் போக்கைத் தடுப்பதற்கு தொலைநோக்குடன் உடனடியாகச் செயற்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்த வேண்டியுள்ளது.

வடக்கின் நெருக்கடிக்குக் காட்டிய அதே தவறான போக்கே பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மீதும் காட்டப்பட்டமை காரணமாக தோட்டங்களில் வாழும் தமிழ் மக்கள், சிங்கள மக்கள் மீது வைத்த நம்பிக்கையை இழந்துள்ளனர். தோட்டத்துறையில் எதிர்காலத்தில் வடக்கின் நிலைமை ஏற்பட இடமுண்டு. தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை ஏற்பதைக் கூட மறுப்பதனால் பெருந்தோட்டங்கள் ஆபத்தின் விளிம்பை நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பங்களிப்புச் செய்தோர் யார்?

பொதுவாக இலங்கையில் இடதுசாரிக்கட்சிகள் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக நல்ல கருத்தியலைக் கொண்டிருந்த போதிலும் நடைமுறையில் மிக மந்தமான போக்கையே கடைப்பிடித்தனர். அதேசமயம் ஆட்சி அதிகாரத்திலிருந்த சந்தர்ப்பங்களிலும் இல்லாத வேளையிலும் முதலாளித்துவக் கட்சிகள் சந்தர்ப்பவாதப் போக்கையே கடைப்பிடித்தனர். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள ஓர் வெற்றிடத்தை நிரப்பவே நாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்வந்துள்ளோம். அனைத்து இனவாதிகளையும் தோற்கடித்து இனங்களுக்கிடையில் உண்மையில் சகோதரத்துவத்தை கட்டியெழுப்பி மனித இனத்தின் எதிர்காலத்தை சிறப்புறச் செய்வதே எமது குறிக்கோளாகும்.

உண்மையில் யுத்தம் இனப்பிரச்சினையின் ஒரு பகுதி மாத்திரமே. யுத்தத்தை நிறுத்துவதன் மூலமும், விடுதலைப்புலிகளைத் தோல்வியுறச் செய்வதன் மூலமும் செயற்பட வேண்டிய பாரிய பொறுப்பு சிங்கள சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது. சிங்கள-தமிழ்-முஸ்லீம் மக்களிடையே சிதறிப்போயுள்ள உறவுகளை மீளக் கட்டியெழுப்புவது எம்முன்னுள்ள பாரிய கடமையாகும்.

அனைத்து இனங்களையும் சார்ந்த அடக்கியொடுக்கப்பட்ட மக்கள் எமது சகோதரத்துவத்தின் அடிப்படையாகும். இந்தக் கொடூர யுத்தத்தின் எந்தப் பிரிவினரும் எமது நண்பர்களாகமாட்டார்கள்.

ஆட்சியாளர்களும் விடுதலைப்புலிகளும் இந்த யுத்தத்தின் மூலம் தமது வாழ்வைத் தேடுகின்றனர். நேர்மையான யுத்தநிறுத்தத்திற்கு அவர்கள் ஒரு போதும் முன்வரமாட்டார்கள். அனைத்து இனவாதிகளும் எம்மைப் பலவீனப்படுத்த தமது அழிவுக்கரங்களை நீட்டுவார்கள் என்பது உண்மை. குறிப்பாக சிங்களவர்களின் சிங்களத்தன்மையையும் பௌத்தர்களின் பௌத்ததன்மையையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திச் சிங்கள பௌத்த விழுமியங்களுக்குள் கொலைகாரத் தத்துவங்களை உட்புகுத்தி இக்கொடூரமான பாவயுத்தத்தின் பங்காளர்களாக செயல்படும் இனவாதச் சிந்தனையாளர்களும் அவ்வமைப்புக்களின் தத்துவாசிரியர்களும் எமக்கு எதிராக போர்க்குரல் எழுப்புவார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

அனைத்து இனங்களுக்கிடையிலான சகோதரத்துவம் இந்த யுத்த வெறியர்களுக்கு எதிராகவே கட்டியெழுப்பப்படும்.

**தோழியர்களே/தோழர்களே**

**அனைத்து இனங்களுக்கிடையிலான சகோதரத்துவத்திற்காக ஓரணி திரள்வோம்!**

**மக்கட் பலத்தால் எம்மைக் கட்டியெழுப்புவோம்!!**

**அனைத்து இனங்களுக்கிடையிலான சகோதரத்துவம்**

**த.பெ 40, ஸ்ரீஜெயவர்த்தனபுரம், கோட்டை.**

(சிங்களத்திலிருந்து மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.)

இஹலதில்ல பமுனுகொட்டுவையில் வசிக்கும் பி.ஜயம்பதி ஆகிய என்னால் கொழும்பு மருதானை ஹெலிகிரப்பிக்ஸ் அச்சகத்தில் பதிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்